ஞாயிறு வெளியீடு. விலை 0-1-3. REGD. NO. M. 4455

திராவிடநாடு

விளம்பர விகிதம்.
இஞ்சு ஒன்றுக்கு 1-0 0.
சர்க்கார் கோர்ட்டு 2-0-0

வருடசந்தா ரூ. 5—0—0
ஆறுமாதம் ரூ. 2—8—0
தனிப்பிரதி ரூ. 0—1—3

மலர் 3 காஞ்சிபுரம் 16—7—44 இதழ் 19.

# கீலட்சேபம்.

பரதன்.

## பணபீமா! பணராமா! பணசோமா! பண மாமா!!

காலட்சேபங்களிலே, கதாரம்பத்திலே, பாகவதர்கள், பாடுவார்கள், பலபீமா, பலராமா! என்று. மேலே பொறித்திருப்பது, கீலட்சேபப்பாட்டு!! பணமே பீமன் பணமே ராமன்! பணமே சோமன்! பணமே மாமன்!! எனவே, கீலட்சேபக்காரர்கள்பாடும் பாடல், பணபீமா! பணராமா!! என்பதாகும்.

"ஏது, பரதா! காஞ்சிபுரத்துக்குத் தோழர் கிருஷ்ணன் வந்திருந்தது பெரிய வேலை செய்துவிட்டது போலிருக்கே. அவர் கிந்தனார் நடத்தினார், நீ கீலட்சேபம் நடத்துகிறாயே, என்ன விசேஷம்? என்று கேட்கத்தோன்றும், கிருஷ்ணன் இனி நடத்த இருக்கும் கிலகண்டருக்குப்பாட்டல்ல, நான் மேலே கூறியிருப்பது. பெரும்பாலான, கதாபகவத்கதா, புராண சத்கதா, பகவத்புராணசத்கதா காலட்சேபங்கள் நடத்துகிறார்களே பாகவதர்கள், அவர்கள் பாடுவது பலராமா, பலபீமா என்றபாடலே. ஆனால் மனமோ, நான் கூறும் பணபீமா பாடலையே மனனம் செய்துகொண்டிருக்கும், பாகவதர்களின் பலபீமாப்பாடலைப் பக்தகோடிகளின் செவி ஏற்றுக்கொள்ளும் அதே சமயத்திலே அவர் தம் சிந்தையிலே இருப்பதும் நான் பொறித்த சிந்துதான்!! புராண காலட்சேபத்தின் பயனாக, மும்மலம் நீக்கப்பட்டு, முக்திகோரிப் பக்தி செய்து கொண்டிருக்கும் முனி புங்கவர்களாவதில்லை இப்பாகவதக்கூட்டம், வெள்ளை வேட்டி, "பன்னிரண்டாறு" ஆகி, அதுவும் மாறிப்பட்டு வேட்டியாகி, சாதாரண உருத்திராட்சம் தங்கக்கவசம் தேடி, ஒட்டைக்காதிலே இருந்த ஒன்பது ரூபாய் கடுக்கன் ஓராயிரம் ரூபாய் பெறுமான முன்னா வைரக்கடுக்கனுக்கு இடமளித்துவிட்டு விலகிவிடவும், வெறும் சாம்பல் 'சேண்டுடன்' சேர்ந்து நெற்றியை அலங்கரிக்கவும், மனையில் மாடியும், மாடியில் ஜோடியும், வந்துசேர்ந்திட, இறவாவரம் தாரும் என்று எம்மானைக் கேட்டுக்கொள்ளும் பெம்மானாகி விடுகின்றனர். பணம்இவர்கள் பெட்டியிலேசேரச் சேர, குணமும் மெள்ள மெள்ளச் சோரம் போகத்தொடங்கிக், கிராசாரமான உணவும், வீரதீரமான உரையும், நரையை மறைக்கும் ஒயிலும், நடையில்புதியமுறையும் கொண்டுவிடுவர். இதுவல்ல, என்குற்றச்சாட்டு. சேற்றில்புரளும்எருமைகூடக், கழுவிவிடும் ஆளிடம்சிக்கினால்கொஞ்சம் பளபளப்புப் பெறுகிறது. அதுதானா? கழுதை மட்டுமென்ன? கொஞ்சம் தேய்ப்பும் மேய்ப்பும் இருப்பின், குதிரையின் கொட்டிலருகே செல்லக்கூடிய உருவம் பெறுகிறது. சந்தேகமிருப்போர் சர்க்கஸ் கழுதைகளைக்காணும் சந்தர்ப்பத்தைத் தேடவேண்டுகிறேன். புராணப் பாகவதர்கள், புதுப்பொலிவு பெறுவது எனக்கு ஆச்சரியத்தைத் தருவதுமில்லை, இவர்கள் இப்படி ஆகிறார்களே என்று காய்ச்சலுமில்லை, வாழ்க்கையின் நிலையாமையைப் போதித்து, வாழ வஜ்ஜிரக்குளிகை வாங்கப்பொருள் திரட்டுவதும், உலகம் நிலையாமை என்பதை ஊராரிடம் எடுத்துக்கூறி ஊதியம் பெற்று, மூன்றடுக்குமாடி அமைத்தாலும் நிற்கக்கூடிய விதமாக (அடி) கடைக்கால் அமைத்து வீடுகட்டுவதும், பொருள்விரும்பாதே அருள்தேடு என்று பாடிவிட்டுப், பொருளுக்கு அலைவதும், மாதர் எனும் ஒரு மாமயக்கில் வீழ்ந்து மதிஇழந்திடாதே என்று மற்றவர்க்கு மதிகூறிவிட்டு, "அருக்கு மங்கையர் மலரடி தடவியும் கருத்தறிந்த பின் அரசிலை தடவியும்" வாழுவதும், கோபம் கூடாதுஅதனைக்கண்டோர் அரனைக்கண்டோர்ஆகார்என்று கவிபாடிவிட்டுக்கோபத்திடம்அடிமைப்படுவதும், ராமநாமமே கற்கண்டுஎன்றுபஜிப்பதும் ரசமுள்ளவஸ்துக்களைப்புசிப்பதும், நாதன்தாளை நேசி என்று பாடுவதும், நள்ளிரவிலே நளினிகளைத் தேடுவதுமாக, இரட்டைவாழ்வு, இச்சகம்பேசிவாழ்க்கையிலேவளம்பெறப் பிச்சை எடுப்பதுமாக இருக்கும் பிழைப்பைநான், மதிப்பதில்லை, காரி உமிழ்வதுமில்லை, அந்த அற்பத்தைக்கண்டிக்க அவ்வளவு கஷ்டப்படுவதா என்பதற்காக! புருவத்தை நெரிப்பேன், புன்சிரிப்புக்கொள்வேன், தலையை அசைப்பேன், வாழ்க்கைக்காகத் தமது ஆற்றலைவிபசாரத்துக்கு ஆளாக்கும் பேர்வழிகளைக் கண்டால்.

கழுதை கத்தும்போது, நாம் காதை வேண்டுமானால் பொத்திக்கொள்ளலாம், அதன் இயல்பு அது, என்று மன்னித்தும் விடலாம், ஆனால் நான் கத்துவது தான் 'கானம்' என்றுகர்த்தபம்கூறினால், சும்மா இருக்கமுடியுமா? அதுபோல இயல்புக்கு ஏற்றபடிசெயலும் அச்செயலும்ஒருசாண் வயிற்றுக்காகவும் நடக்கும்போது, நான், அத்தகையோர்களைக் கண்டிப்பதில்லை. போகட்டும் என்றே இருந்துவிடுவது. ஆனால், "என் செயலே சிலாக்கியமானது" என்று வீம்பு பேசவும், மற்றையோரின் செயலைமதித்திட மறுத்துவம்பு செய்யவும் துணிந்தால், அந்தச் சோற்றுத் துருத்திகளின் மீது சொல்லம்பு வீசாமல் இருக்கமுடியுமா, நீங்களே கூறுங்கள். நம்பொனாப் புராணங்களைக் கற்று, நாவசைத்து வாழும் நடமாடிகள், நம்மை—!—கல்லடிக்கும்சொல்லடிக்கும் இடையே நின்று மக்களின் நிலை உயர வேண்டுமென்ற ஒரே குறிக்கோள் கொண்டு உழைக்கும் சுயமரியாதைக்காரர்களை—வாழவழி பல இருந்தும், பாலைவனம்போல் வாழ்வை ஆக்கிக்கொண்டு, பாமரரின் பாதையைச்செப்பனிடும்பணியிலே ஈடுபட்டுப், பாதகர் கூறும்பழிச்சொல்லையே பணியணியாகப் பூண்டு பாடுபடும் தன்மான இயக்கத் தோழர்களை—நம்மை இந்தப்பாடிஆடிப்பாமரரின் மூடத்தனத்தைநாடிப் பொருள் தேடி, ஆரியமெனும் கேடருடன் கூடி வாழும் குடிலர்கள், கண்டிப்பதென்றால், அதுஎவ்வளவு ஆத்திரத்தை ஊட்டக்கூடியதுஎன்பதைஎண்ணிப்பாருங்கள், பிறகு கூறுங்கள், நான்கடுமையான பதங்களை உபயோகித்திருக்கிறேனா, இந்த மனஎரிச்சலினுங்கூடக் கடுமையை மட்டுப்படுத்தி இருக்கிறேனா என்பதை!

* * * *

உலகிலே, எத்தனையோ விதமாகப் பிழைப்பவர்கள் உண்டு. ஆடுவதும் பாடுவதும் ஆளடிமை ஆகுவதும் ஓடுவதும் கூடுவதும், தங்கமே! ஒருஜாண் வயிற்றுக் கடி, ஞானத்தங்கமே! என்று பாடுவார்

(2ம் பக்கம் பார்க்க)

# காலட்சேபம்!

(1-ம் பக்கத் தொடர்ச்சி.)

கள், அதுபோலப்பலவேலைகளிலே ஈடுபடுவர். வாழப், பல்லைக்காட்டிப்பிழைப்பவரும் கொல்லைப்புறத்திலே நள்ளிரவிலே மெல்லப்புகுந்து களவாடி வாழ்பவரும் அங்காடி வைப்பவரும், அதிலே களவாடி வாழ்பவரும், வண்டியோட்டியோவாசல் கூட்டியோ, வேறுபல வேலைகள் செய்தோ மக்கள் வாழக் காண்கிறோம், இங்கும், எங்கும். ஆனால் அண்டப்புளுகு பேசி, அறிவிலாதாரை மேலும் அறிவீனராக்கி, வாழுபவர் இங்கன்றி வேறெங்கும் இல்லை. பக்க வாத்தியத்துடன் பச்சைப் புளுகு, அதற்குப் பாற்செம்பும் பணமும் பாமரர் தருவர் காணிக்கையாக! இல்லாதது, நடவாதது, நம்ப முடியாதது, அறிவுக்கு முரணானது, அநாகரிகத்து இடமாவது ஆகிய கருத்துகள் அடங்கிய கதைகள், கற்காலத்திலே கட்டப்பட்ட கதைகள், இவைகளை இன்றும்கூறி, அதனால் பணம் திரட்டி வாழுகின்றனர் புராணிகர்கள் என்போர். இந்த விசித்திரப் பிறவிகள் இங்கன்றி வேறு எங்கும்கிடையாது. டாக்டர்கள் உண்டு, ஓவியக்காரரும் காவியக்காரரும் உளர், பாவாணரும் மதபோதகரும் உலாவுகின்றனர், இப்படிப் பச்சைப் புளுகுகைப் பாமரரிடம் பேசிப் பணம் பறிப்பதுடன் அவர்தம் அறிவுக்கும் குழிபறிக்கும் கேடர்கள், வேறு எந்த நாட்டிலும் கிடையாது. அட்லாஸ் திருமணம், வீனஸ் பரிணயம், மினர்வா கர்வபங்கம், ஓடின் பட்டாபிஷேகம்,என்றுசத்கதாகாலட்சேபங்கள் நடத்திப் பணம் திரட்டும் பேர்வழிகள் மேனாடுகளிலே இல்லை, அங்கு ஒருகாலத்தில் வீனஸ், ஓடின், மினர்வா, அட்லாஸ் முதலான தேவதைகள் தொழப்பட்டுவந்தனர், பின்னர் அறிவு துலங்கவே அக்கற்பனைகளை விட்டொழித்துக் கண்ணியமான வாழ்வு நடத்தத் தொடங்கினர். இங்கோ, இன்னமும், அந்த நாளிலே, இடியை இறைவனென்றும், மழையை மகேஸ்வரனென்றும், பூமியைத் தேவி என்றும் நம்பித்தொழுத நாட்களிலே கோர்த்துவைத்த பொய்யுரைகளை, இன்றும்கூறி, அதனைப்பிழைப்புக்கு ஒருவழியெனக்கொண்டு வாழுகின்றனர். இந்த விதம் அவர்கள் வாழ்க்கையை நடத்துவதே இழுக்கானது. நாட்டுப்பொருளை, மருளால்தட்டிப் பறிக்கும் நயவஞ்சகம் நிரம்பியது. புளுகுபேசி வயிறு வளர்க்கும் இப்புல்லர்களை அறிவுடைய சமுகம் ஆதரிக்காது, தற்குறிகள் அதிகமாக உள்ளதால் தமிழகத்திலே இவர்கள் நடமாட முடிகிறது. ஏதோ நடந்தவரையில் நடக்கட்டும் நமது வயிறு நிரம்பட்டும் என்ற அளவோடு திருப்தி அடையாமல், இந்த நாப்பறையாளர்கள், நாட்டு நடவடிக்கைகளைப்பற்றிப்பேசவும், சீர்திருத்த தலைவர்களை ஏசவும் துணிகின்றனர், ஆப்பு அசைத்த குரங்கின் கதையையும் அறியாமல்! மந்தமதியைத்தமதுசொந்தச் சரக்காகக்கொண்டு, வெந்ததைத்தின்று வாயில் வந்ததைப்பேசி, காலன் வருமுன்னே காசுதிரட்டும் காரியத்திலே கவனம் செலுத்தி வாழ்வதைவிட்டு, நிலவை நோக்கிக் குலைக்கும் குக்கல் போலவும், கடல் அலையை நோக்கிக் கட்டளையிடும் கருத்தழிந்தவன் போலவும், சமுதாயத்தைச் சீராக்க உழைக்கும் பேராண்மை கொண்டோரைத் தூற்றவும் துணிகின்றனர்! பாமரர், இவர்தம் பேச்சுப் பச்சைப்புளுகு என்பதை உணரும்பக்குவம் பெறாததால், பணம் தருவதுடன்பாதத்தையும் வணங்குவது கண்டு, இப்பேச்சுவிற்றுப்பிழைக்கும் கூட்டத்தார், தமக்கு ஏதோ பெருமை இருப்பதாகக் கருதிக் கொண்டு, உலகிலே தமக்கோர் உயர் இடம் இருப்பதாக எண்ணிக், கானமயிலாடக் கண்டிருந்த வான்கோழிபோல ஆடவும், முன்வருகின்றனர். இதன்பயன், விளைவு, யாதாகும் என்பதைஎண்ணிடமறுக்கின்றனர். இருக்கும்நிலை இழந்து, இருந்ததை எண்ணி இனி எங்கிடப் போகின்றனர், இது உறுதி. இதற்கு அச்சாரம் தருவதே இதுபோது அவர்கள் சுயமரியாதைக்காரர்கள்மீது சுடுசொல் வீசும் செயல் என்று கூறுவேன். விபசாரம் செய்து வாழுபவள், கணவனுடன்கூடிக் காலங் கழிப்பவளைக் கேலிசெய்வது போல, ஆந்தை, குயிலைப் பழிப்பது போல, குடியன் குணவானைக் குறைகூறு போல இருக்கிறது, இந்தப் புராணம் படித்துவரும் பேர்வழிகள், சுயமரியாதைக்காரர்களைக் கண்டிக்கும் செயல். சவுண்டிகள் சவுக்கடிபட்டனர், ஆரியம் அலறுகிறது கசையடிப்பட்டு, சுயமரியாதைக்காரர்களிடம் சிக்கி. இதுபோது இப்புராணிர்கள் வருகின்றனர், வாயசைத்துக்கொண்டு. வயிற்றைக்காட்டிப் பிழைக்கவேண்டியவர்கள், வாய்கொடுக்கிறார்கள் இப்போது, பிறகு வேகுதே நெஞ்சம் என்று கூறுவர், இவர் தம் யோக்யதைகளைச் சுயமரியாதைக்காரர்கள்நாட்டுக்கு எடுத்துச்கூறத்தொடங்கும் போது. கிள்ளைமொழி பேசிடும் கிருபானந்தவாரியார் முதற்கொண்டு கருமாதிக்குக்கதைகூறும் காலட்சேபக்காரர்ஈறாகக் கணக்கெடுத்தால், தமிழகத்திலே இவர்களின்தொகை, இருநூறு இருக்கும். இந்த இருநூறு பேருக்குப், பிழைப்பு இருக்க வேண்டும்என்பதற்காக, எவ்வளவுபெரும்பாலான மக்களின் அறிவு கெடுவது! என்ற கேள்வியைச் சுயமரியாதைக்காரர் கேட்கின்றனர், இதுதகுமா? வேறு நாணயமான, தொழிலிலே ஏன்ஈடுபடக்கூடாது, புளுகுதானா பிழைக்கவழியாக அமைதல் வேண்டும் என்று கேட்கின்றனர், இது தவறா? மக்கள் மனதிலே மட்டற்ற மடைமை குவிந்திருக்கிறது, அதனைப்போக்க, முற்போக்காளர்கள்முயலுகின்றனர், புராணம் படித்து நீங்கள்அம் மக்களைப் பின்னுக்கே இழுத்துச் செல்கின்றீர்கள், சமுகத்தைக் கெடுக்கின்றீர்கள், என்று செப்புகின்றனர், இது தவறாகுமா? கடவுளைப்பற்றிக்கபோதிக்கருத்துகளும்,மதத்தின்பெயரால் மடமையும் கட்டளைகளின் பெயரால் கொடுமையும் மலியும்படியான கதைகளை மக்களிடம் கூறி, அவர் தம் அறிவின் ஊற்றிலே ஆபாசத்தைக் கலக்கிவிடுகிறீர்கள், இது அக்ரமம் அல்லவா என்றுகேட்கின்றனர், இதுதவறா! சுயமரியாதைக்காரர் சொல்வதிலே எதுதவறு என்று இப்புராணிகர்கள் மெய்ப்பிக்கமுடியும்! இவர்களைக் குறைகூறுவதால் சுயமரியாதைக்காரர்களுக்குப், பிழைக்கும்வழி கிடைக்கிறதா, காசா பணமா, காலையிலே விருந்தும் இரவிலே சந்திப்பும் கிடைக்கிறதா. என்ன பலனைக் கோரி, எந்தச் சொந்த இலாபத்தைக் கருதுகிறார்கள், பெறுகிறார்கள், சுயமரியாதைக்காரர்கள். சொல்லமுடியுமா சொல்லைவிற்றுச் சொகுசாக வாழும் கூட்டத்தினர். கதையிலே காமாட்சிக்குக் கலியாணம், அதற்காகக் கதாப்பிரசங்கியின் மனைவி மீனாட்சிக்குச் சேலையும் மாலையும் தரப்படுவது! கதையிலே காகுத்தனுக்குப் பட்டாபிஷேகம், இதற்குப் புராணப்பிரசங்கிக்குக் கனகாபிஷேகம்! இதுபோலச் சுயமரியாதைக்காரர்கள் ஏதேனும்பலன்கோரிச்சுயநலத்துக்காகப் பேசுகிறார்களா? இல்லையே! எளிய வாழ்க்கை, மேலானஎண்ணம்! கடமையிலே களிப்பு! இவையன்றோ சுயமரியாதைக்காரர்களுக்கு இலட்சியங்கள்! அப்படிப்பட்டவர்களைச் சொல்லிலே செப்படிவித்தை நடத்திக்காட்டுபவர் தூற்றுவதா, நியாயமா, நேர்மையா? என்று கேட்கிறேன். புராணிகர்களைச் சுயமரியாதைக்காரன் சாடுவதும் எக்காரணத்தை முன்னிட்டு? மக்களின் மனதைக்கெடுத்து வாழும் ஆரியத்துக்கு இப்புராணிகர்கள் கமிஷன் ஏஜண்டுகளாக இருப்பதனால் தானே! இனி ஒருவிதிசெய்துகொண்டு இக்காலட்சேபக்காரர்கள், அலைகடலை அடக்கிய வீரர்கள் கதையை, அறிவுக்கு அரசிகள் கதையை, இமயத்தில் புலி பொறித்த வீரன் கதையை, அடிமையை மீட்ட ஆண்மையாளன் கதையை, விஞ்ஞானத்தை வளர்த்த வித்தகரின் கதையைக்கூறட்டும், காசுபெறட்டும், நமக்குத் தடையில்லை. அத்தகைய விவேகிகள், வீரர்கள், வீரமங்கையர், ஆண்மையாளர்கள் ஆகியோரின் கதைகளை, இந்நாட்டு வரலாற்றிலும் வெளிநாட்டுச் சரித்திரங்களிலுந்தேடி எடுத்துத் தீட்டக்கூடாதா, அவைகளைக்கூறி, மக்களிடையே தெளிவுபிறக்கச் செய்யக்கூடாதா? பிழைப்பையும் கெடுத்துக் கொள்ளவேண்டாம், மக்களின் மதியையும் மாய்க்க வேண்டாம், மனம் இருந்தால் மார்க்கமா இல்லை! கற்பனைக் கலியாணங்களைக் கூறுவதை நிறுத்திக் கொண்டு, வரலாறுகளிலே உள்ள உண்மைக் காதற்காட்சிகளை எடுத்து, ஏன் காலட்சேபம் செய்யக்கூடாது? கதையா

(7-ம் பக்கம் பார்க்க)

தொடர் கதை,
★
சௌமியன்.

# பார்வதி பி. ஏ;

கதை கற்பனையே, கதையில்வரும் பெயர்கள் யாரையும் குறிப்பிடுவனவல்ல.

[முன்பு:-லோபி ஆலாலசுந்தரர், அறிமுகப் படுத்தப்படுகிறார். அவருக்கு வாரிசாகவர இருக்கும் பார்த்திபன் எனும் வாலிப வாய்வீரனுக்குக் காதலி பார்வதி B. A; இவள் ஓர் இலட்சியவாதி. குமார் எனும் பாட்டாளி, பார்த்திபனுடைய பிரசங்கத்தில் இலயிக்கிறான். குமார் பொதுப் பணத்தைக் கொள்ளையடித்து மறைந்து விட்டதாகப் பத்திரிகையிலே செய்தி. பார்வதி கவலைப் படுகிறாள். உத்தமி என்பவளின் சிநேகிதத்தால் பார்வதிக்கு டைபிஸ்ட் வேலை கிடைக்கிறது. பார்த்திபனால் 'ரட்சகன்' என்னும் பத்திரிகை நடத்தப்படுகிறது. தூக்கள் குமரகுருபரர், பார்த்திபனுக்கும் ஜெயத்துக்கும் சிநேகிதம் உண்டாகும்படி வேலைசெய்து மகிழ்ச்சியடைகிறார். இதற்கிடையே பார்வதியின் தோழி, உத்தமிக்கு, நரசிம்மன் என்பவன் காதலனாகிறான். பார்த்திபன், கதகளிநடனம் பார்க்கக் கேரளம் செல்கிறான். உத்தமி கருவுற்றாள். பெங்களூரில் ஓர் மாநாடு நடைபெறுகிறது. அங்கு பார்த்திபனைப் பார்வதி சந்திக்கிறாள்........

மிக்கமமதையோடு சிரித்துக்கொண்டிருந்த பார்த்திபனை வீழ்த்தும் வழியைக் கண்டாக வேண்டும் என்ற திடசித்தத்தோடு லலிதகுமாரியும் பார்வதியும் வீடு திரும்பினர். பார்வதி மிகவும் அலுத்துக் கிடந்தாள். குமாரின் நிலைமையைத் தெரிந்துகொள்ள முடியாமற் போய்விட்ட கவலையினால்வாடிய பார்வதிக்கு ஆறுதல் கூறமுயன்றாள் லலிதா.

“லலீ! அவன் ஒரு மாயாவி! கடிதத்திலே இருந்த எழுத்துகள் மறைந்து போகும்படி செய்துவிட்டான் பார்த்தாயா? ஒரு நொடியிலே நம்மை ஏய்த்து விட்டானே.” என்று சற்று ஆயாசத்தோடு கூறினாள் பார்வதி. லலிதகுமாரி, “இது ஒரு பெரியமாயமுமல்ல, மந்திரமுமல்லப்பார்வதி! நான் படித்ததுண்டு, ஒரு விதமான மை இருக்கிறது. அதனால் எழுதினால், சிலநாட்களுக்குள், எழுத்து மறைந்துவிடும். ஜெய்யா, எழுதியகடிதம், அம்மாதிரியான மையினால் எழுதப்பட்டது. அவ்வளவு தான்!” என்று விளக்கமுரைத்தாள். விசாரம் நீங்கவில்லைப் பார்வதிக்கு. “அப்படிப்பட்ட மையினால் அக்கடிதம் எழுதப்பட்டிருக்கிறது என்பது பார்த்திபனுக்கு எப்படித் தெரியும்?” என்று கேட்டாள் பார்வதி. “ஏன்? கடிதத்தைக்கண்டதும் தெரிந்துகொண்டிருப்பான். அவனே, ஜெயாவுக்கு, அந்த இரகசிய இங்கியைத்தந்திருப்பான். ஆகவே அவனுக்கு அதன்மர்மம் தெரிந்துவிட்டது. எனக்கு அந்தக்கடிதத்தின் எழுத்து மறைந்து விட்டது அதிசயமாகத் தெரியவில்லை. சரியான சமயத்திலே அது மறைந்து விட்டதே, அதுதான் எனக்கு அதிசயமாக இருக்கிறது.” என்று கூறினாள், லலிதா. “ஆமாம்! கடிதம் ஓடிவிட்டது என்று கூறினான். கடிதம் இதோ என்று நான்கூறுகிறேன், கடிதம்வெறும் காகிதமாக இருக்கிறது, இது மாயமாக இல்லையோ,” என்று கூறிக்கொண்டே, “எங்கே அந்தமாயக்கடிதம்” என்று லலிதாவைக்கேட்க, அவள் தன் மணிப்பர்சிலே மடித்து வைத்திருந்த கடிதத்தை எடுத்துக்கொடுத்தாள். கடிதத்தைக் கைநீட்டி வாங்கியதும், பார்வதி மறுபடியும் ஆச்சரியத்தால் கூவினாள், ஏன்? கடிதத்திலே, எழுத்துகள் தெளிவாகத் தெரிந்தன.!

“லலீ! இந்த அதிசயத்தைப் பார்! காலியாக இருந்ததே, இதோ, ஒரு எழுத்து விடாமல் சகலமும் தெரிகிறது பார்! இது என்ன வேடிக்கை!” என்று பார்வதி ஆச்சரியத்தோடு கேட்டாள். லலிதகுமாரியும் கடிதத்தைப் பார்த்து ஆச்சரியப்பட்டாள். சிலநிமிஷங்கள்வரையிலே இருவருக்கும் ஒன்றும் புரியவில்லை. “மகாபுத்திசாலிபோல, இரகசிய இங்கியினால் எழுதப்பட்டது, மறைந்து விட்டது என்று சொன்னாயே, இதுஎன்ன, பார்த்தாயா? அங்கே, வெறும்காகிதமாக இருந்தது, இங்கே பழயபடிகடிதமாக இருக்கிறது, இப்போது என்ன சொல்கிறாய். லலி, அவன்பெரிய மந்திரக்காரன்தான், மாயாஜாலத்தாலேதான், என்குமாரை, எங்கோ ஒளித்து வைத்திருக்கிறான். எனக்கு முன்பு இருந்ததைவிடப் பயம் அதிகமாகி விட்டது. என்னசெய்வேன், என்று பார்வதி பயந்துபேசினாள். லலிதகுமாரி யோசித்தாள். கொஞ்சநேரத்திற்கெல்லாம், பார்வதியைப்பார்த்து, “பார்வதி, மனோவசியம், என்றுகூறுவார்களே, இப்னாடிசம் மெஸ்மெரிசம் என்று, அது தெரிந்திருக்கிறது அந்தத் துஷ்டனுக்கு, சிலவினாடிகள், இப்னாடிசம் தெரிந்தவர்கள், மற்றவர்மனதைக்கட்டுப்படுத்த முடியும். அந்த இப்னாடிசத்தினாலே தான், பார்த்திபன் நம் இருவரையும், மயக்கிக், கடிதத்தைவெறும்காகிதமாகஇருப்பதாக நாம் நம்பும்படி செய்தான். இப்னாடிசம் தெரிந்தவன் என்பதிலே சந்தேகமில்லை. அது தெரிந்தவர்களால், ஒருவரைச்சில வினாடிகள் அடிமைபோல ஆட்டிவைக்க முடியும். சிரி! சிரி! என்று கூறுவான் இப்னாடிசம் தெரிந்தவன். அதனால் மயக்குற்றவன் சிரிப்பான் காரணமின்றி. அதுபோலவே அழவைக்க முடியும், தூங்கவைக்க முடியும், கசப்புப் பொருளை இனிப்பு என்றுகூறிடச் செய்யமுடியும். நான் பார்த்திருக்கிறேன், இப்னாடிசம் செய்பவர்களை.” என்று கூறினாள். பார்வதிக்கு, அப்படித்தான் இருக்கவேண்டும் என்று தோன்றிற்று. கடிதத்தின் மர்மம் துலங்கிவிட்டதும், பழயபடி, குமார், வேடிதுண்டு என்ற சொற்களின் கவனம் பார்வதியைக் குடையத் தொடங்கிற்று. இருவரும் கூடிநெடுநேரம் ஆலோசித்தனர், அந்தத் துஷ்டனுடன் போர்தொடுக்க என்ன முறைகளை அனுசரிக்க வேண்டும் என்பதுபற்றி. பணம், செல்வாக்கு, ஆள்அம்பு, தந்திரம், இவ்வளவுடன் இப்னாடிசம் வேறுதெரிந்திருக்கிறது அந்தத்திமிர்பிடித்த தன்னலக்காரனுக்கு. இரண்டு பெண்கள் கூடி அவனுடைய கொட்டத்தை அடக்கவேண்டும், `குமாரைக்கண்டுபிடிக்கவேண்டும் என்றால் சாமான்யமா? சுலபமா? ஏதேதோ யோசித்தனர், ஒவ்வொரு முறையும் ஏதாவது ஓர் விதத்திலே ஊனமுடையதாகத் தெரிந்தது. “ஒருவேளை நான் அந்தச் சமயத்திலே வராதுஇருந்திருந்தால், உன்னிடம் ஆசை கொண்டு பார்த்திபன் குமார் விஷயத்தைக்கூறி இருந்திருக்கக் கூடும்” என்று லலிதா கூறினாள், பார்வதியோ, “சேச்சே! அவனாவது இரகசியத்தைக் கூறுவதாவது. என்னையும் ஏய்த்து விடுவான், உன்னையும் ஏய்த்துவிடுவான். அவ்வளவு சுலபத்திலே ஏமாறக்கூடியவனல்ல. பெண்கள் அவன் கைக்குப்பூச்செண்டுகள்! நீ அங்கு அந்தச்சமயத்திலே வந்து சேர்ந்ததே நல்லதாயிற்று,” என்று கூறினாள். இருவரும் இங்ஙனம் யோசனைகளிலே ஆழ்ந்திருந்த அதேசமயத்திலே, பார்த்திபனும், ஆழ்ந்தயோசனையிலே தான்ஈடுபட்டிருந்தான். பார்வதிஎவ்வளவு பசப்பினாள்! குமார் மீது அவளுக்கு அவ்வளவு காதல்! அவனுடைய நிலைமையைத் தெரிந்துகொள்ள, என்னைக்காதலிப்பது போலப்பாசாங்கு செய்தான். முட்டாள், அவளுடைய சாகசத்தைக்கண்டு, நான் ஏமாறுவேன் என்றுகருதினாள். அவளும் நடித்தாள், நானும் காதலால் கட்டுண்டவன்போல நடித்துக்கொண்டிருக்கும்

( 5-ம்பக்கம் பார்க்க )

# திராவிட நாடு.

காஞ்சி 16—7—44 ஞாயிறு


## விதவையின் கண்ணீர்!

"அந்தோ! அனியாயம்! பார்க்கவே சகிக்கவில்லையே"

"நாற்றம் அதிகமாக இருக்கிறது"

"அழுகிவிட்டது! அதனாலேதான் நாற்றம் இப்படி இருக்கிறது!"

"எந்தப் பாவி பெற்றெடுத்தாளோ தெரியவில்லை. கள்ளியின் கருவிலே உதித்தது. கோட்டான் போலிருக்கிறதுவிழி! குழவிபோல் இருக்கிறது கைகால்! அமாவாசை நிறம்! அகன்ற வாய்! பிழைத்திருந்தால் பெரிய தலைக்கிருக்காக இருந்திருக்கும் போலிருக்கிறது.

குளக்கரையருகேகூட்டம், பிணமாகிக் கிடந்த குழந்தையைக் கண்டு பலர் பலவிதமாகப் பேசுகின்றனர், இறந்துபோன குழந்தை பிழைத்திருந்தாலும், காணச் சகியாத உருவாய், கண்டவர் ஏசும் ஜடமாய்த்தான் இருந்திருக்கும்! தாலியிழந்த தையல் யாரையோ வேலியோரத்தில் கூடியதன் விளைவு! அடக்கமுடியாத உணர்ச்சியின் அறுவடை!

குழந்தை யாருடையது? யாருக்குத் தெரியும்? யாரோ ஓர்பாவி! எவளோ ஒரு காதகி! எந்தச் சனியனோ தெரியவில்லை!

"அந்த ஓலைக்குத்துக்குடிசையிலேஒண்டிக்கிடப்பாளே சாந்தி, அவள்பெற்றெடுத்தபிள்ளை தான்! பெற்றுவிட்டுப் பிறகு வளர்க்க வகையறியாது, வம்புவளருமே எனவிரண்டு, குளத்திலே தூக்கி வீசிவிட்டாள்" என்று கூறுகின்றனர் சிலர், அந்த விதவையோ விம்முகிறாள், கைம்பெண்ணின் கண்ணீர் பார்ப்போரின் கருத்தைக் கரையவைக்குமென்று, "நான் பெற்ற மகவு அல்ல! என்னை நம்புங்கள்" என்று அந்த நாரிகூற, ஊரார், "சூலுடன் இருந்ததை நாங்கள் அறிவோமே" என்றுரைக்கின்றனர். "குழந்தைதான் பிணமாகிவிட்டதே, இன்னமும் யாருடையதுஎன்றகேள்வி ஏன்" என்றுகேட்கிறாள் சேயைப்பிணமாகிக் கண்டதாய்! பிணமோ நாறிக்கிடக்கிறது!

"கடைசிப் போராட்டம்"
"உயிரைத்திரணமாக மதியுங்கள்"
"வெள்ளையனே, வெளியே, போ"

என்ற பல்வேறு முழக்கங்களுடன் ஆகஸ்ட் திர்மானம் காந்தியாரால் நிறைவேற்றப்பட்டது, சர்க்காருடன் நேரடியான போராட்டத்தைத் துவக்குவது என்ற முடிவுடன், ரயில்கள் கவிழ்ந்தன, தந்திகள் அறுபட்டன, தபாலாபீசுகள் தீக்கிரையாயின, எங்கும்ஒரே அமளி, ஆகஸ்ட் தீர்மானத்தின் விளைவு இங்ஙனமிருந்தது. இன்றோ, காந்தியார், இந்த விபரீத விளைவுக்குத் தான்காரணமல்ல என்றுகூறுகிறார். அந்த விபரீத விளைவு, பிறந்தும் பிணமாக்கப்பட்டது. பிணமான பிள்ளையைப், பெற்றவள், தன்னுடையதுதான் என்று கூறிக்கொள்ள முடியாத நிலை, காரணம், விதவையின் விருந்துவெளியே தெரிவதுகூடாது என்ற மனப்பான்மைக்குக் கட்டுப்பட்டிருப்பதே. இதுபோல இருக்கிறது காந்தியாரின் பேச்சு, ஆகஸ்ட் தீர்மானத்தின் கர்த்தா, தமது முயற்சிமுறியடிக்கப்பட்டு விடவே, விதவைக்கண்ணீர் வடிப்பது போலக் காட்சி அளிக்கிறார்.

ஆகஸ்ட்டுத் தீர்மானம் அக்ரமம் அல்ல! ஆகஸ்ட் தீர்மானத்தை வாபிஸ்வாங்க எனக்கு அதிகாரம் இல்லை. ஆகஸ்ட் தீர்மானம் காலாவதியாகிவிட்டது, ஆகவே அதனை எப்படி வாபிஸ் வாங்குவது, இருந்தால்தானே வாபிஸ் வாங்க!

இவைகள் "மகாத்மாக்கள்" மட்டுமே பேசக்கூடிய மொழிகள்! மதிகுறைந்த முரண்பாடுமிகுந்த, பொருள்தேய்ந்த இம்மொழி, கூறுவோரைப் பித்தர் என்று கூறஎவரும் தயங்கார். ஆனால், விவரிக்கமுடியாத அளவு விளம்பரம் பெற்று, கோடீஸ்வரர்களின் முன்னோடுபவராகஇருப்பதால் செல்வாக்குபெற்றுள்ள காந்தியார்பேசுகிறார், இவைகளை நாடுகேட்டும், நகைத்திடாதுஉளது.

உண்மையை உணர்வோரின் தொகை குறைவு. அவர்கள் அறிவர், காந்தியாரின் நிலைமை, நாம் முதலிலே தீட்டியுள்ள கதையிலே காணப்படும் கைம்பெண்ணின் நிலைமைபோன்றிருக்கும் உண்மை. விதவையின் கண்ணீர், பலருடைய மனதை இளகவைக்கும். அதுபோலக், காந்தியாரின் பேச்சு, வைசிராயின்மனப் போக்கைமாற்றும்என்று காந்தியாரும் அவருடைய சீடகோடிகளும்நம்பிஏமாற்றமடைந்துவிட்டனர். ஆகஸ்ட்தீர்மானத்தின்விளைவான "குழப்பம்" எனும்குழந்தையோ, பிணமாகிவிட்டது!!

குழந்தையும் இறந்துவிட்டது, கைம்பெண்ணும் கதறுகிறாள், நான்பெற்ற குழந்தையல்ல என்று கூறுகிறாள். இந்நிலையிலே, விதவையை மன்னித்துவிடலாமே என்று கூறுகின்றனர் சிலர், சர்க்காரோ, மீண்டும்இந்தவிதவை, வேலிஓரமோ சாலைப்பக்கமோசென்று கருவுற்றால் என்னசெய்வது என்று கேட்கின்றனர். சரியான கேள்விதான்!! சோரம்போகும் பேர்வழிஎன்று தெரிந்தும், அரசியல் விபசாரித்தனத்திலே கைதேர்ந்தவர்கள் என்பதை அறிந்தும், சர்க்கார்,மறுபடியும் மறுபடியும், காந்திக்கூட்டத்தாரிடம் பேரம்பேசுவதிலே கவலை செலுத்துகிறதேயொழிய, விம்மிடும் விதவை, வேலியருகேசென்று கூலிக்குக் கலவியைத்தரும் கோணல்நடத்தைக்காரியின்போக்குத் தெரிந்துகொண்டபிறகாவது, அரசியல் விபசாரம் புரிந்தோருக்கு ஆட்சிபுரியும் உரிமைஇல்லை என்று ஆண்மையுடன் ஏன் கூறலாகாது என்றுகேட்கிறோம்.

---


சென்னை

## சுயமரியாதை மாநாடு.

30—7—44 ஞாயிறு காலை
9-மணிக்கு, கோகலே மண்டபத்தில்
ஆரம்பமாகும்.

தலைவர்:—

கும்பகோணம் தோழர்
**K. K. நீலமேகம் அவர்கள்**

திறப்பாளர்:—

சேலம் திருமதி.
**கனகம்மையார் அவர்கள்**
(சேலம் முனிசிபல் காலேஜ் பிரின்சிபல் T. A. இராமசாமி கவுண்டர் M. A; L. T; துணைவியார்)

கொடியேற்றுபவர்:—

**தோழர். T. சண்முகம் அவர்கள்**
(செங்கற்பட்டு மாவட்ட ஆட்சி மன்றத் தலைவர்)

பெரியார் E. V. R. சௌந்தரபாண்டியனார், C. N. அண்ணாத்துரை, A. பொன்னம்பலனார், நெடுஞ்செழியன், இந்திராணி பாலசுப்ரமண்யம் ஆகிய மற்றும்பலர் மாநாட்டில் சொற்பொழிவாற்றுவார்கள்.



## சென்னை ஒற்றவாடை தியேட்டரில்

**31—7—44 திங்கள் இரவு 9-மணிக்கு**

காஞ்சித் திராவிடநடிகர் கழகத்தினரால்

# ★ சந்திரோதயம் ★

எனும் சமுக சீர்திருத்த நாடகம் நடைபெறும்.

பெரியார் ஈ. வெ. ரா. தலைமைவகிப்பார்.

# பார்வதி பி. ஏ;

3ம் பக்கத் தொடர்ச்சி.

போது வந்துசேர்ந்தாள் வம்பு வளர்க்க
அந்த வாலில்லாக்குரங்கு!

ஜெயாவுக்குத் திமிர்பிடித்துஆட்டுகிறது! அவளிடம் எவனோஎன்னைப்பற்றிப்பேசி இருக்கிறான் என்று தெரிகிறது, அவளை வேறு கவனித்துக்கொள்ள வேண்டும். கஷ்டம் வரத்தொடங்கினாலே இது போலத்தான், பலவரும். சரி! இந்தச்சமயத்திலேதான் கலக்கம் கூடாது, தைரியம்வேண்டும்,'' என்றெல்லாம் எண்ணியபடி, மேற்கொண்டு என்ன செய்வது என்பதுபற்றிப் பலவாறு யோசித்துப் பார்த்தான். சிகரெட்டுக்கு மேல்சிகரெட் செலவாகிக்கொண்டிருந்ததேயொழியத், திட்டம் எதும் தயாராகவில்லை. ஓரிடத்தில் இரண்டு பெண்களும், மற்றோரிடத்திலே ஒரு ஆடவனும், ஆக இரண்டு முகாம்களிலே, போர்த்திட்டம் வகுத்துக் கொண்டிருந்தனர்.

“கடிதம் எழுதிவிட்டோம், கலங்கிப் போய் நமது காலடியிலே வந்து வீழ்ந்து கிடப்பான்,'' என்று மனப்பால் குடித்தபடி இருந்தாள் ஜெயா.

எவ்வளவோ, மூடுமந்திரமாகத்தான் செய்துவைத்திருக்கும் காரியத்தைச், சில பெண்கள் கூடிக்கொண்டு கெடுத்துவிட முயலுவது, பார்த்திபனுக்குக் கோபமூட்டிற்று. பார்வதி ஒரு B. A; லலிதகுமாரி ஒரு டாக்டர், இவர்கள் தன்னுடைய தந்திரத்தைத் தெரிந்துகொள்வதிலே அவ்வளவு ஆச்சரியம் இல்லை, ஜெயாகூட அல்லவா, கிளம்பிவிட்டாள் போருக்கு, என்பதை எண்ணும்போது, பார்த்திபனுடைய கோபம்அதிகரித்தது. “துஷ்டப்பெண்ணைத் தொலைத்துவிடுகிறேன். என்னிடமே காட்டுகிறாள் கைவரிசையை! தன்னைப்பெரிய அரம்பை என்றுகருதிக்கொண்டிருக்கிறாள். இவளை நான் கைவிட்டுவிட்டேனும், இந்தக் கண்ணகிக்குக் கடுங்கோபம் வந்துவிட்டதாம். என்னை மிரட்டுகிறாள், என் இரகசியத்தைக் கூறிவிடுவாளாம், அதிகாரிகளுக்கு. எவனென்று தெரியவில்லை, என்னைப்பற்றி அவளிடம் பேசியவன். ஒருவேளை என் ஆட்களிலேயே எவனாவது அதிர்ப்திப்பட்டு எனக்குஆபத்துத்தேடுகிறானோ? ஜெயாவைப்பற்றிப் பயப்படவேண்டிய அவசியமில்லை. கொஞ்சநேரம் அவளுடன் சிரித்து விளையாடினால், செக்புத்தகத்திலே ஒரு ஆயிரம் எழுதினால், அவளுடைய கோபம் இருந்த இடம் தெரியாமல் போகும். ஆனால், அவளுக்கு உளவுகூறியவன், ஜெயாவை நான் சரிப்படுத்திக்கொண்டதும், வேறே யாருடைய உதவியைத் தேடுவானோ? புதிய ஆபத்துவருமோ என்று யோசித்தான். ஒரு சமயம், இந்தத் துஷ்டச் சிறுக்கிகள் அவனைக் காணநேரிட்டால்,...... என்று நினைத்துப்பார்த்தான். அது மகா ஆபத்தாக முடியும், அந்தச் சந்திப்புமட்டும் நடைபெறக்கூடாது. அதை எப்படியாவது தடுக்கவேண்டும். அந்த ஆள்யார்? அதைத் தெரிந்துகொள்ள வேண்டுமே? என்று எண்ணியபடி, வேடர்களின் குரல்கேட்ட வேங்கை புதருகே கோபத்துடன் உலவிவாலைக்கீழே அடித்து, உறுமிக்கொண்டிருப்பது போல ஒன்றிரண்டு வார்த்தைகளை வாய்விட்டும் கூறிக்கொண்டே உலவினான். அவன் தங்கியிருந்த லலிதபவன் என்ற சாப்பாட்டு விடுதிக்காரர் சங்கரஐயர், பார்த்திபனைப் பார்க்க இரு பெண்கள் வந்துபோன விஷயமும், காரமாகப் பேச்சாடிய விஷயமும், அவர்கள் போய்விட்ட பிறகு பார்த்திபன் கவலையுடன் உலவிக்கொண்டிருந்த விஷயமும், வேலையாட்கள்மூலம் கேள்விப்பட்டார்! பிறருடைய விஷயத்திலே, தந்திரமாகத் தலையிடுகிற சமர்த்து லலிதபவன் சங்கர ஐயருடைய பிரத்தியேகமான படிப்பு!

“நமக்கென்ன! அவாளவாள் இஷ்டம்! லோகம் பலவிதம்! “நமக்குச் சம்பந்தமில்லாத விஷயத்தை நாம் விசாரிப்பானேன்'' என்பவை சங்கரய்யரின் முன்னுரைகள்; முடிவுரை “நான்சொன்னபடி செய்துபாருங்கோ, காரியம் நிச்சயம் கைகூடும்''— “இப்படிச் செய்யாவிட்டா மகாபெரிய தவறுன்னுசொல்றேன்'' என்று இருக்கும். ஆரம்பத்திலே பிறர்விஷயத்திலே நுழைகிற சுபாவமே தமக்குக்கிடையாது என்று கூறுவதும், மெள்ள மெள்ளத் தலையிடுவதும் பிறகு பிரதம சூத்ரதாரியாவதும், சங்கர ஐயரின் பிரத்தியேகமான வேலைத்திட்டம். அவர் லலித பவனத்தின் சொந்தக்காரரானதுகூட அதே வேலைமுறையினாலே தான். ஒரு காலத்திலே, எல்லோரையும் போலத்தான் சங்கர ஐயரும் அந்த ஓட்டலுக்குக், காபிசாப்பிட வந்து போய்க்கொண்டிருந்தார். அப்போது, அங்கு தங்கும் விடுதிகிடையாது, ரம்மியமான காட்சிகள் கிடையாது. அந்த இடம், “ஓம் கணபதி காபிஓட்டல்'' என்ற விலாசத்திலே விளங்கிய காலம். ஏதோ ஒரு கோயிலிலே தமக்கிருந்த அர்ச்சகவேலை, அம்பாளின் ஆபரணம் களவாடப்பட்டதற்குத் தாமே காரணம் என்று குறை கூறப்பட்டது கேட்டு, கோயில் சேவகத்தை உதறிவிட்டு, வெளிஏறியவிஸ்வநாத ஐயர், ஓம் கணபதி ஓட்டலை நடத்திக்கொண்டுவந்தார். உழைப்பாளியின் உடலிலே உயிர் ஊசலாடிக்கொண்டிருப்பதுபோல, ஓட்டல் நடந்துவந்தது. அந்தச் சமயத்திலே காலைமாலை இருவேளையும் சங்கர ஐயர் வருவதுண்டு, மிராசு சங்கர ஐயர், பத்து ஏகருக்கு மேற்பட்ட பூமிக்குடையவராக இருந்தவர்தான், ஆனால், ஏதோ “போதாதவேளை'' கடன் தொல்லைவந்தது. இன்சால்வெண்டாக வேண்டி நேரிட்டது. தாரத்தையும் “துரதிர்ஷ்டவசத்தால்'' இழந்தார்.பிறகு சொந்தக் கிராமத்தைவிட்டுப் பல இடங்களிலே சுற்றிப்பல வேலைகளிலேஇருந்துவிட்டுக் கடைசியாகப் பெங்களூர்வந்து சேர்ந்தார். ஓம் கணபதி விலாசத்திலே இருவேளையும் காப்பி, அகிலாண்டேஸ்வரி ஓட்டலிலேசாப்பாடு, அனந்தகிருஷ்ணய்யர் வீட்டுத் திண்ணையிலே படுக்கை, இப்படியே நடந்துவந்தது, சங்கர ஐயரின் வாழ்க்கை. அனந்தகிருஷ்ணய்யர் ஒரு வக்கீல். அவருக்குச்சமயா சமயத்திலே வேலை ஏதாகிலும் செய்வார், அவர் தரும் பணமும், அவரிடம் வரும் கட்சிக்காரர்கள் தருகிற பணமும், சங்கர ஐயருக்கு ஜிவனோபாய மார்க்கம். இருந்தாலும் யாருக்கும் தெரியாது, சங்கர ஐயர் இப்படிப்பட்ட வாழ்க்கையிலே உள்ளவர் என்று. ஏதோ ஊரிலே இருக்கிற நிலபுலத்திலே கிடைக்கும் வருமானத்தை வைத்துக்கொண்டு சங்கரஐயர் ஜோராக வாழ்கிறார் என்றே பேசிக்கொள்வர். கவலையற்று, இருப்பார். காப்பி சாப்பிட்டுவிட்டு வெளியே போய்விடுவர் மற்றவர்கள், வேறு எவ்வளவோஜோலி உண்டல்லவா அவர்களுக்கு. சங்கரய்யர் அப்படிப் போகமாட்டார். “என்டா அம்பி! காப்பி யார்போட்டா? கிருஷ்ணனோ?'' என்று கேட்பார். “ஆமாம்'' என்று பதில் கிடைத்தால், “நேக்கு காப்பியைச் சாப்பிடும்போதே தெரிஞ்சுதே, கிருஷ்ணன் கையைவச்சிருக்கான்னு. அவனுக்குத்தானே தெரியும், சீனியை வாரிக்கொட்ட'' என்று கூறிக், காப்பியிலே இனிப்பு அதிகம் என்பதைக் கூறுவார். அதிலிருந்து பேச்சு ஆரம்பமாகிக், காப்பிப்பவுடர் தயாரிக்கும்முறை, கைப்பாகத்தின் விதம், முதலியசகலமும் பேசப்படும். பேச்சுக்குத்துணைசெய்ய, விஸ்வநாத ஐயரின் வெற்றிலைப்பெட்டியும், சம்புவின் புகையிலைத்துண்டும் வந்து சேரும். விஸ்வநாத ஐயருக்குச், சங்கரய்யர் பிறகு உபதேசம்புரிய ஆரம்பிப்பார்.

“ஓய்! ஓட்டலுக்குமனுஷ்யா எதுக்கு வரான்னு நினைக்கிறீர்''

இது என்ன கேள்வி! அவாளவாளுக்குத்தேவையானதைச் சாப்பிட.....''

“ரொம்ப லட்சணம். அவாளவாளுக்கு வீடுவாசல் இல்லையோ. விஸ்வநாத ஐயருடைய காப்பியும் இட்லியும் காரவடையும் அவாளவா ஆத்திலேசெய்துகொள்ள முடியாதோ?''

“யார்சொன்னா முடியாதுன்னு?''

“அப்போ, ஏன் ஓட்டலுக்குவரா''

“சங்கரஐயரவாள்! உம்முடைய கேள்விக்கு நீரேதான் பதிலும் சொல்லவேண்டும்''

“ஓய்! ஆத்திலே எதையும்செய்யலாம், ஆனா, எப்படிச்சொல்றனோ அப்படியே

(6-ம் பக்கம் பார்க்க.)

# பார்வதி பி, ஏ;

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

சாட்டாசனும். அது நன்னுஇல்லே, இது சரியில்லேன்னுசொன்னலோ, பரதேவதைகள் சும்மாஇருப்பாளோ. பேசாமே சாப்பிடணும், வாய்க்கு ருசியாக இருந்தாலும்சரி, இல்லாமபோனலும் சரி."

"நீர் சொல்றது நிஜந்தான். ஒவ்வொரு ஆத்திலேயும் இந்த அக்ரமம் நடக்கறது"

"அதைஎன் சொல்றேள். ஒரு விஷயம் கேளுங்கோ. நேத்துக்காலமே, அனந்த கிருஷ்ணய்யர் ஆத்திலே வெண்டைக்காய் சாம்பார்........."

"நேக்குப்பிடிக்கறதே! இல்லே ஓய், இந்த வெண்டைக்காய், வழவழன்னு அது சாப்பிடப்பிடிக்கறதோ!"

"அதேதான் சொன்னேர் அனந்த கிருஷ்ணய்யர். அலமு என்ன சொன்ன தெரியுமோ?"

"அலமு, யார்?"

"அலமுதெரியாதோ? அனந்தகிருஷ்ணய்யர் பாரியா. அலமுயாருன்னு உமக்குத் தெரிஞ்சிருக்கணுமே. ஓய், உம்ம மருமான் இருக்கானேல்லோ, மகாதேவன், அவன் ஆத்துக்கு வலதுகைப் பக்கத்திலே மூணுவது ஆத்திலே, நெட்டையா ஒரு வக்கீல் இருக்கார் தெரியுமேன்னே?"

"ஆமாம்! சந்திரன்னுசொல்வா"

"அதே ஆசாமிதான். சந்திரசேகரன்னு பேர் அவனுக்கு, சந்திரன்னு சொல்வா, ஐயர்னு சொல்லிக்கிறதில்லே, அவனுடைய பாரியா, காமுதெரியுமோ? அந்தக் காமுவக்கு நேர் இளையவ இந்த அலமு"

"சரி! அலமுபுராணம் இருக்கட்டும், அனந்தய்யர் விஷயம் சொல்லுங்கோ"

"லட்சுமியைப்பற்றிக்கூறுமே மகா விஷ்ணுவைப்பற்றிப் பேசுவாளோ. விஷயத்தைக்கேளும், வெண்டைக்காய்ச்சாம்பார் நேக்குப்பிடிக்காதுன்னு அனந்தன் சொன்ன, இவ, கேட்கணுமேன்னே. கொஞ்சம் சாட்டுப்பாத்துட்டுச் சொல்லுங்கோ, பேஷா செய்சிருக்கேன்னு வம்புசெய்ரு. அவனே ஒரே பிடிவாதமா, கூடவேகூடாதுன்னுசொல்றுன், வெண்டைக்காய் ரொம்பநல்லதுன்னு டாக்டர்கள் சொல்ருன்னு அலமு வைத்யசாஸ்திரம்பேச, அனந்தனுக்குக் கோபம் பிறந்து, எவனே ஒரு முட்டாள் டாக்டர் சொல்லிட்டானேகேட்க, உமக்கு எப்போதுமே வாய்த்துடுக்கு, டாக்டர்களென்ருலே கேவலமாப்பேசறதுதான் உமக்கு வாடிக்கைன்னுஅலமுசீற,எண்டி! உன்தம்பி டாக்டராக இருக்கிறதாலேயே நீ ஊரிலேஇருக்கிற டாக்டர்களுக்கெல்லாம் வக்கீலாகிவிட்டயோன்னு அனந்தன்கேட்க, போதும் வாயைமூடிண்டிரும், நான் வக்கீல்வேலேக்குப் படிச்சிருந்தா இப்படி உம்மாட்டமா,.வாரத்துக்குஒருதடவை கோர்ட்டுக்குப் போய்வர்ர வக்கிலா இருந்திருக்கமாட்டேன்னு அலமு துடுக்குத்தனமாப்பேசத்,தனக்குக் கேஸ்சரிவரகிடைக்காததாலே அலமுவே தன்ளைக் கேலிசெய்ருளேன்னு அனந்தனுக்குப் பிரமாதமாக் கோபம்பிறந்து, வெண்டைக்காய்ச் சாம்பாரைக் கீழே கொட்ட, அலமு தேள்கொட்டியவ போலஅழப், பிறகுநான் உள்ளேபோய், அடக்கி. அக்கம் பக்கம் கேலிசெய்வான்னுசொல்லிச், சமாதானம் செய்தேன். கடைசிவரையிலே அனந்தன் சாப்பிடவே இல்லே. ஏகாதசிதான்."

"வெண்டைக்காய்ச் சாம்பார் செய்த வேலேயைப் பார்த்தீரோ?"

"அதனுலேதான் ஆத்திலே, அடங்கி இருக்கவேண்டியவா, இப்படி ஓட்டலிலேவந்து, தேவையானதை வாங்கறது, அதுசரியில்லே, இதுசரியில்லேன்னுசொல்றது, அவா சொல்றதுக்கு ஓட்டல்காரா, வாஞ்சனேயோடே சமாதானம் சொல்றது, அதைக்கேட்டு அவா திருப்திஅடையறதுன்னு, வாடிக்கை இருக்கு. அதுக்காக்கும், அவாளவா ஓட்டல்வருவது."

"சங்கர ஐயர்! உம்ம மானேஜ்மெண்டிலே ஓட்டல் நடந்தா, பேஷாஇருக்கும்னு எண்றேன்"

"சந்தேகமா உமக்கு! முதலிலே, இந்த ஓட்டல் பெயரையே மாற்றிவிடுவேன், ஓம் கணபதியாவது ஓடாத கணபதியாவது, பெயரே நன்ன இல்லேயே"

இப்படி நடக்கும் பேச்சு. ஒவ்வொரு நாளும் வேறுவேறு பேச்சாக இருந்தாலும், தனக்கு ஓட்டல் நடத்துவதிலே பிரத்தியேகமான திறமை இருப்பதாக ருஜுப்படுத்துவதே சங்கர ஐயரின்நோக்கமாக இருக்கும். இப்படிப் பேசிப்பேசி விஸ்வநாத ஐயரின் வரவுசெலவு விவகாரத்திலே நுழைந்து, பிறகு மானேஜராகி, கொஞ்சநாளிலே, விஸ்வநாத ஐயருக்குப் பணம் |கொடுத்து ஓட்டலே விலேக்கே வாங்கிக்கொண்டார் சங்கரஐயர்! அந்தச் "சான்சு" அவருக்குக் கிடைத்தது பொன்னியின் தயவால்!

[தொடரும்.]


## விளம்பரம்.

அன்புடையீர்!

நமது கடையில் கைதேர்ந்த தொழிலாளர்களைக்கொண்டுநவீனநாகரிகமுறையில்தயாரித்த அசல் பொன் வெள்ளி நகைகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும். அன்பர்கள் வந்து ஆதரிக்க கேட்டுக் கொள்கிறோம்.

T. P. S. பொன்னப்பா,

H. M. அப்துல்காதர்.

சராப் & நகைவியாபாரம்,

26. செங்கழுநீர் ஓடைவீதி,

பெரிய காஞ்சிபுரம்.


## தோழர் நாதனுக்குப் பதவி.

சென்னைமாகாண யுத்த சஞ்சிகையின் ஆசிரியர் ராவ்சாகிப் T. A. V. நாதன் அவர்களைப் பத்திரிகைகளின் விசேஷ ஆலோசகராகச் சர்க்கார் நியமித்திருக்கின்றனர்.


## அகில இந்திய சுதேசி கைத்தொழில் & கைத்தறி பொருட்காட்சி!

[சேலம் முனிசிபாலிடியாரால் நடத்தப்படுவது]

4-8-44 முதல் 19-8-44 வரை.

1. பொருட்காட்சி நகரின் மத்தியிலுள்ள விஸ்தாரமான விக்டோரியா மைதானத்தில் நடைபெறும். வருஷாவருஷம் நடக்கும் மாரியம்மன் திருவிழாவின்போது பொருட்காட்சி நடைபெறுவதால்ஏராளமான ஜனங்கள் எதிர்பார்க்கப்படுகிறது.

2. பஸ்ஸ்டாண்டு, சினிமா தியேட்டர்கள், ஓட்டல்கள் எல்லாம் பொருட்சாட்சி சாலேக்கு அருகிலேயே இருக்கின்றன.

3. சங்கீதக்கச்சேரிகளும் மற்றும் மக்கள் மனதைக் கவரும் அனேக வித வேடிக்கை விநோதங்களும் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன.

4. இவ்வருஷம் கடைகளுக்கான விடுதிகள் சொற்பமே உள்ளன, ஏமாருமலிருக்க உடனே பிரகடனத்திற்கு எழுதுக.

கே. பி. கந்தசாமி, முனிசிபல் கமிஷனர்.
சேலம்

# காலட்சேபம்!

2ம் பக்கத் தொடர்ச்சி.

இல்லை? முயற்சிசெய்ததுண்டா? முயற்சி செய்யவேண்டும் என்ற மனப்பான்மையாவது உதித்ததுண்டா? இவ்வளவு காலவேகம் இருந்தும், மச்ச கூர்ம வராக அவதாரங்களைப்பற்றியும், மாடேறும் மகேஸ்வரன் மாமுனிவர்களின் பத்தினிகளிடம் காமக்கருத்தோடு சென்றது பற்றியும் பேசிப் பிழைக்கின்றனரே அன்றி, மக்களுக்கு அறிவுபிறக்கும்வகையில் ஏதேனும்பேசுகின்றனரா? இவைகளை நாம் கேட்கிறோம், தவறா?

* * * *

மணமுள்ளமலரை, ஊமை விற்கிறான், மலத்தைக் குவித்துவைத்துக்கொண்டு மனோலயம்பாடி, வாரீர், பெறுவீர், என்று அழைக்கிறான் ஒரு மதியிலி. மதியுடையோர் எதைப்பெறுவர், எங்கு போவர்! அதுபோலப், புராணப்பிரசங்கிகளிலே ஒருசிலருக்கு, "நாக்கிலே சரஸ்வதி தாண்டவமாடுகிறாளாம்" "மொழியிலே தேன் சொட்டுகிறதாம்" இவை உண்மையாகஇருக்கக்கூடும்,இருப்பினும் பயன் என்ன? மலத்தை மனோலயத்திலே வர்ணித்துப் பயன்உண்டோ! கள்ளுக்கடையிலே காம்போதி பாடுபவனைக் கண்ணியர்கள் போற்றுவரா? அதுபோல அறிவுக்குப்பொருந்தாக் கதைகளை, "அருமையாக எடுத்துக்கூறுகிறார், அழகாக வர்ணிக்கிறார், அலங்காரமாகப் பேசுகிறார்" என்று விளம்பரங்களைப் பெற்றுப்பேசுவதால், அறிவுடையார், மக்கள் நலனிலே கருத்துடையார், அத்தகையோர்களின்போக்கை மதிக்கமுடியுமா? பெரியார் ஈ. வெ. இராமசாமி இத்தகைய பேச்சைவிற்றுவாழும், பேர்வழிகளைக் கண்டிக்கிறார். அவர் கண்டிக்கிறார் என்பதற்காக, அப்புராணிகர்கள் அவரைக் கண்டிக்கிறார்களாம்! கிருபானந்தவாரியார் என்ற புராணப்பிரசங்கி, எங்கோசொன்னாராம், பெரியார் என்ற நச்சு ஆறு ஓடுகிறதென்று! பெரிய-ஆறு-பெரியார்-என்று சொல்லிலே செப்படிவித்தைகாட்டுகிறார், வாரியார். அம்முறையிலே, சொல்லிலே செப்படிகாட்டுவது, கடினமல்ல! மிக மிகஎளிது!!

வாழ்வழிகற்ற வாரியார், செயற்கரிய செய்யும் பெரியாரை நன்கு அறியார், நாட்டுநிலையையும் தெரியார், அத்தகைய வாயாரிடம் மக்கள் இக்காலத்திலே மதிப்புவையார்! சுயமரியாதைக்காரர்கள், எய்த்துப்பிழைப்பவர், ஏளனம்செய்யும்போது எரியார், வாரியார்போன்றவர்களுக்குவேண்டுமென்றே ஊறுசெய்யார், கதைகூறிப்பிழைப்பவரைக் கண்டுகாயார். ஆனால் வம்புவளர்த்திடப் புராணிகர்கள் முன்வந்தாலோ, சுயமரியாதைக்காரர்கள், தோயார், அவர்கள் எதற்குமே தயார்!! சுயமரியாதைக்காரர்கள் வம்பினைக்கொய்யார், ஆனால் வம்பைப் பிறர் வளர்த்திடினோ அவர் வீழும்வரை வேலை செய்வதிலே ஓயார்! திருப்பாசுரத்தை அவர்கள்மீது வீசினும் தேயார்,!! பரிதாபத்துக்குரிய புராணப்பிரசங்கிகள்மீது சுயமரியாதைக்காரர்கள் பாயார், புளுகுப்பந்தல் வேயார், ஆனால் சழக்கரின் சதிச்செயலால் சாயார், இயற்பகைபோல ஈயார், சுயமரியாதைக்காரர்களுக்குச் சரி, யார்? கூறுவரா, புளுகுபேசும் வாயார்? யார் தமிழுக்கு உரியார்? சுயநலமின்றிஉழைக்கும் பெரியாரின், படையினரா, வாழவாயைவிற்கும் வாரியார்களா?

* * * *

நச்சு ஆறும், பெரியாரின் இயக்கம், நாராசச்சேற்றிலே அமிழ்ந்துகிடக்கும் புராணவாயார் கூறுகிறார். வாரியார் வாக்குவன்மைவாய்ந்தவரெனச் சிலர் கூறுவதுண்டு. இருக்கலாம்! ஆனால் பகுத்தறிவாளருக்குத்தெரியும், ஆரியர் மமதை எனும் மலைக்கருகே கடுஞ்சித்தமெனும் காட்டிலே, அமைத்துள்ளபுராணமெனும் பழய மாளிகையிலே, புராணிகர்கள் எனும் கோட்டான்கள்கிடக்கின்றனஎன்பது. வாரியார் அந்த "வர்க்கத்திலே" வேந்தராக இருக்கலாம். பேச்சாளராக இருக்கவுங்கூடும், ஆனால் அந்தத்திறமை எதற்குப் பயன்படுகிறது? மக்களை முன்னேற்றவா? மதச்சண்டைகளை நீக்கவா? ஜாதிப்பூசல்களைப்போக்கவா? அறிவீனத்தைஒழிக்கவா? ஆரிய ஆணவத்தை அடக்கவா? அக்ரமத்தை அழிக்கவா? அநீதியை அகற்றவா? எதற்குப் பயன்படுகிறது அவருடையதிறமை? மாமரத்திலே தலைகீழாகத்தொங்கியபடி துயிலும் வௌவால், புளியம்பழத்தைப்பற்றிய கனவு கண்டுகளிக்குமாம்! கண்ணைத் திறந்தால் இனிப்பாக மாங்கனி இருக்கக்காணலாம். அந்தக் கனிகுலுங்கும்மரத்திலே தொங்கிக்கொண்டே, புளியம்பழத்தைப்பற்றிய கனவு காணுமாம் வௌவால்!! அதுபோலத் தமிழ் அறிவு எனும் தருவிலே தலைகீழாகத்தொங்கிக்கொண்டு ஆரியக்காடியிலே ஆசைகொள்பவர்தானே, வாரியார். அவரிடம் எத்தகைய திறமைஇருந்தால்தான் என்ன? விபசாரியின்விழி செந்தாமரையாகஇருந்தால் என்ன, இராமற்போனாலென்ன!

அவிவேகிக்குச் சாத்திரம் பாரம், மெய்யறிவிலோர்க்கு அங்கம் பாரம், சாந்தியில்லாதோர்க்கு உளம்பாரம், அவாவினருக்கு ஞானம பாரம், என்று ஆன்றோர் கூறினர், அதுபோலப் புராணிகர்களுக்குத் திறமை ஒருபாரமேயாகும். யாழின் நரம்புகளை எலிகடித்துக்கெடுத்துவிடுவதுபோல இவர்கள் தமிழரின் மனதைக்கெடுக்கவே தமது திறமையைப் பயன்படுத்துகின்றனர். இத்திருக்கூட்டத்தில் ஒருவரான வாரியார், நாற்பதாண்டுகளாக நாட்டுக்குஉழைத்து, மக்களிடை விழிப்புணர்ச்சியைஊட்டி, இனஎழுச்சியைக்காட்டி, ஆரியத்தை மெள்ள வாட்டிவரும் பெரியாருக்கு, எந்தவிதத்திலும் ஈடாகார்! ஈடில்லாதது மட்டுமல்ல, பெரியாரின் பெரும்படை ஆற்றிவரும் தொண்டுதனை உணரும் பான்மையும் ஆனந்தவாரியாருக்கு இருக்கக் காரணமில்லை. எதிர்நீச்சில் வல்லவர், எமது பெரியார் என்று எண்ணற்ற இளைஞர்கள்கூறுவது, வாரியாரின் செவிகட்கு எப்படி எட்டும்! அவர் ஆரியத்தின் எடுபிடியாகி, ஏடுதாங்கி, நாடுசுற்றிப் பாடிக், கேடரின் சீடராகி, மூடரின் முறுவல்கண்டு மகிழ்ந்து கருத்துக்குருடர் தரும் காணிக்கைபெற்று வாழ்ந்துவருபவராயிற்றே, அவருக்கென்னதெரியும், அச்சம், தயை, தாட்சணியமின்றிப் பெரியார் ஆற்றிவரும் பெருந்தொண்டின் திறம்! ஆனைமுகனைப் பூஜித்து ஆறுமுகத்தைவேண்டிக்கொண்டு, அரிஅரபுத்ரனின் கதையையோ, ஆனந்தவல்லியின் ஆடலின்மேன்மையைப்பற்றியோ பேசிவாழும் வாரியார் எங்ஙனம் அறிவார்! ஆறும், பெரியஆறும், நச்ச ஆறும்! புராணப்பிச்சுப் பிடித்தலைபவர் கூறுகிறார். "ஆறுதான் ஐயா! பெரிய ஆறுதான்! குப்பைகூளத்தையும் மேட்டையும் காட்டையும் அடித்துச்செல்லும் பெரிய ஆறுதான்! ஆரியத்தின் அடிவேருக்கு நச்சுநீர்பாய்ச்சும் ஆறு, பெரியாரின்உழைப்பிலிருந்து உதித்து ஓடிவருகிறது. அதைக் கண்டு ஆரியம் ஓலமிடுகிறது. உம்முடைய ஓட்டைப்படகிலேறி அந்த ஆற்றினைக் கடக்கநினைக்காதீர், ஜாக்ரதை, ஆபத்தை அணைத்துக்கொள்ளாதீர்!—என்று வாரியாருக்குக்கூறுகிறேன். காந்தீயம் எனும் கருங்கல் அரணைத் துளைத்துக்கொண்டு ஓடிவருகிறது அந்தப்பெரிய ஆறு! பார்ப்பனியம் என்ற பழயஅணையைப்பிளந்துகொண்டு பாய்ந்தோடிவருகிறது அந்தப் பெரியஆறு! அதன் சுழலிலேவீழ்ந்து சிதையாதீர், சோமேசன் காப்பார் என்று நம்பிநலியாதீர் என்று வாரியாருக்குக் கூறுகிறேன். மயிலை ஐயங்கார் மார்பளவு இறங்கிப்பார்த்து மல்லாந்து வீழ்ந்தது அந்த ஆற்றிலே! ஆச்சாரியார், இடுப்பளவு இறங்கிநின்று வேகத்தைத் தாங்கொணாது விழநேர்ந்ததும் அந்த ஆற்றிலேதான்!! அதிலே காலைவிட்டுவிட்டுப் பிறகு அவதிப்படவேண்டாம், கைத்தலநிறைகனி அப்பமொடு அவல் பொரி கப்பியகரிமுகன்பேர் கூறிக்கொண்டு வாழ்வுக்கு வளம்தேடிக்கொள்ளுங்கள். உழைக்க ஒருகூட்டம் பெரியார் உண்டாக்கிவிட்டார், பிழைக்க ஓர்கூட்டம் புராணம் முன்னாளிலேயே முத்திரை பொறித்துவைத்துவிட்டது. உழைக்கும் கூட்டத்தின் உள்ளத்திலே எரிச்சல்எழச் செய்யாதீர், பின்னர் போச்சேபிழைப்பு என்று மனம்கரையாதீர், முன்கூட்டியே கூறுகிறேன், நான் வீணுக்குக் கூறவதில்லை, நான் கூறுவது வீண்போவதுமில்லை, வீணரன்றி மற்றையோர்கவனித்தேபார்ப்பர்என்சொல்லை. ஒன்றுகூற

(8ம்பக்கம் பார்க்க.)

## கிலட்சேபம்!

7-ம் பக்கத்தொடர்ச்சி

வேன், உள்ளத்திலே நன்குபதியவைத்துக்கொள்ளுங்கள். பெரியாரின் படையினரின்பணி, ஊதியமின்றி. ஊராரின் பரிசுஇன்றி நடப்பது, உம்மைப்போன்ற உரத்தகுரலோரின்பணிக்குப்பரிசுஉண்டு, பாலும் பழமும் உண்டு, பாவையர் பொருள்தருவர், பழமை விரும்பிகள் தொழுவர். இலாபத்தோடுள்ள காரியம் உம்முடையது. கஷ்டநஷ்டத்திலே உழல்பவர், பெரியாரின்படையினர். பழய காலத்துக்குப் பராக்குக்கூறி வாழ்வது உமது கூட்டம், புதியகாலத்துக்குப் பாதை வகுப்பது எமதுகூட்டம். உமது கூட்டத்தின் காலம் முடிவடையுந்தருவாயை நெருங்குகிறது, எமதுகூட்டம் காளைப்பருவத்திலேஉள்ளது. இதனை உணரும் முதலில், பிறகு இறங்கலாம் அரங்கத்தில். சுயமரியாதைக்காரர்கள் போலப், பணத்தைக்கருதாது, நீர் பக்திக்காகப் பணிபுரிகிறீரா? இல்லையே! உமது வேலைக்குக்கூலி உண்டு! எமது வேலைக்குக் கூலிகேளோம்!! இந்த மகத்தான வித்யாசத்தை மனதிலேகொள்ளும். நாவை நற்காரியத்துக்குப் பயன்படுத்த இனியேனும் முயலும். புராணிகர்களின் பொழுதுசாய்ந்துகொண்டிருக்கிறெ தன்பதைத்தெரிந்துகொள்ளும். கிழமடந்தை ஒரு பொருளும் கிட்டாதேனும் இனிதுபேசி எவர்பின்னும் சென்று, மனோரதம் நிறைவேறாது, நொந்தமனதுடன் திரும்புவதுபோலப் புராணிகர்களின் நிலைமையும் மாறப்போகிறது. நாட்டிலே கொஞ்சம் அறிவு வளரட்டும், பாரும்அப்போது, நாவாணிபம் நடைபெறுகிறதாஎன்று. இப்போதுங்கூட எம்போன்றவர் கண்களுக்குப் புராணக்கதைபேசிப் பொழுதுஓட்டும் புல்லர்கள், "முதிர்பருவத்தளர்ச்சியால் முடியாது நடனகதிமுயல்வாராகி மகிழ்ச்சி அறநடிக்கும்-ஆடுங்கூத்தியைப் போலவே" காட்சி அளிக்கின்றனர். இதனை உணர்ந்து, இகத்தை இடரின்றிக் கழிக்கஇறைவனை இறைஞ்சுவதும், பரத்துக்கு முன்பணத்தைக் கட்டிவிடுவதுமான "பக்தி" மார்க்கத்தோடு நின்றுவிடும்; சுயமரியாதைச் சக்தியோடு மோதிக்கொள்ளவேண்டாம், அது பலருடைய மமதை எனும் மண்டைகளை உடைத்துவிட்ட மலையினின்றும், வேகமாகவீழ்ந்தோடும் ஆறு!-என்று வாரியாருக்குக் கூறுகிறேன்.

காலட்சேபக்காரர்களின் போக்கு, இந்த என் கிலட்சேபத்தின் பலனாக மாறக்கூடும். மாறாவிட்டால் அவர்களின் போக்குநாறிப்போகும், நான் அதைத் தடுக்கமுடியாது. காலம் என்ற வீரன் தரும் கசையடி அவர்களைக் கலங்கிக் கதறிடச்செய்யும்.

## புலி புலம்புகிறது!

உலவி உலவி ஊரை உருக்குலைத்து வந்த புலியை, வேட்டைக்காரர்கள் நாலா பக்கமும் சூழ்ந்துகொண்டு, வேலை எவியும் அம்பு எய்தும் விரட்ட, உடலிலே உதிரம் பீறிட, உயிருக்கு ஆபத்து வந்ததை உணர்ந்து புதர்களிலே பதுங்குவதும், அந்தப்புதரருகேயும் அம்புபாய்ந்துவரக்கண்டு வேறோர் புதருக்கு ஓடுவதுமாக இருப்பதுபோலாகிவிட்டது ஜெர்மனியின்நிலை இன்று. டென்மார்க் வீழ்ந்தது, நார்வே நலிந்தது, பாரிஸ் பணிந்தது, போலந்து குலைந்தது, ரஸ்டாவ்பிடிபட்டது, கார்காவ் சிக்கிக்கொண்டது, என்றெல்லாம் செவியில் விழவும், சிந்தை நோகவுமாகவுமாக இருந்தது போய், இன்று, அரண்கள் பிளக்கப்பட்டன, கோட்டைகள் தகர்க்கப்பட்டன, யுக்ரைனிலிருந்து ஜெர்மானியர் விரட்டப்பட்டனர், ரோம் நகரிலிருந்து ஓடிவிட்டனர், மின்ஸ்க் மீட்கப்பட்டது, மிரட்சி அடைந்தனர் நாஜிகள், நார்மண்டியிலே வெற்றி, செர்பர்க் முறைமுகம் சிக்கிவிட்டது என்ற செய்திகளைக் கேட்கிறோம். கண்டறியாதனகண்டோம்என்று கூறிப் பேருவகைஅடைகிறோம். சோவியத் சம்மட்டி அடியினால் தாக்குண்டு ஓடும் நாஜிகள், மின்ஸ்க் என்னும் நகரருகே அமைத்திருந்த அரணின் பெயர், புலி அரண் என்பதாம்! நார்மண்டியிலே ஜெனரல் ரோமலின் அரணுக்கு நரிஅரண் என்று பெயராம்! இக்கிழமை, இவ்விரு அரண்களும் தவிடுபொடியாகிவிட்டன. சோவியத் படைகள், மின்ஸ்க் நகரை, வெள்ளை ரஷியாவின் தலைநகரைப் பிடித்துக்கொண்டு மேலும் பல மைல் முன்னேறிவிட்டன. நாஜிப்படைகள் கூட்டம் கூட்டமாகச் சரணடைகின்றனவாம்! போர்ப்பொருள் களத்திலே குவியல்குவியலாகக் கிடைத்தனவாம், சோர்விலாது உழைத்து வெற்றிபெற்றவரும் வீரமணிகளாம் சோவியத் மக்களுக்கு.

இதுபோது இத்தாலியிலேமுன்னேறிவரும் நேசப்படைகள், அடிக்கடி ஹிட்லரும் முசோலினியும் சந்திக்கும் இடமான பிரென்னர் கணவாயை நோக்கியும், மற்றோர் நேசப்படை பாரிஸ் பட்டினத்தைநோக்கியும், சோவியத் படை, ஜெர்மன் எல்லையை நோக்கியும் பாய்ந்து வந்துகொண்டிருக்கின்றன, போரிட்ட ஜெர்மன்புலிபுலம்புகிறது. அதன்கடைசிக் குரல் கேட்கும் காலம் நெருங்குகிறது.

அதுபோலவே, இம்பால் கோஹிமாப் பகுதியிலே இருந்த ஜப்பானியர் விரட்டப்பட்டனர், மற்றும் ஜப்பானியரிடம் பிடிபட்டிருந்த உக்ரூல் என்ற இடமும் நேசப்படையினால் மீட்கப்பட்டுவிட்டது.

புலம்பும் புலியும் புண்பட்ட நரியும், மடியும் கடைசிக்கட்டத்தைக் காண உலகு ஆவலோடு காத்திருக்கிறது.

—— ——

## இந்துமதத்தின் (அவ) லட்சணம்!

[காரைக்குடி "குமரன்" பத்திரிகை, இந்துமதத்தின் இன்றைய நிலைபற்றி எழுதுவதாவது]

**நமது மதவாதிகள்,** மதம் மோக்ஷமடைவதற்காக என்று கூறுவதை யாவரும் அறிவர். சமயதத்துவத்தை நோக்கமாகக்கொண்டு வாழ்வோர்தொகை எப்போதுமே குறைவுதான். தத்துவத்தோடு உலக வியவகாரத்தையுங் கலந்து வாழ்வதையே ஒருவாறு சமய வாழ்வென்று கூறினர். வரவரச் சமய நோக்கங்கள் மறைந்துவிட்டன. மனிதர்செய்யுங் காரியங்கட்கெல்லாம் சமயவழியில் சமாதானங் கூறப்படுகிறது. ஒழுங்கீனமான செயல்கள்கூடச் சமயநெறி பற்றியனவென்றுவாதிடச் சிலர் முற்படவும் செய்கின்றனர்.

சமயத் தலைவர்கள்வாழ்ந்த உயர்தர வாழ்க்கையின் இலட்சியமும், அவர்களுடைய மேன்மையான உபதேசங்களும் வலியிழக்கும்படி தற்கால மதக் காவலாளர்கள் நடக்கமுற்பட்டிருப்பதைப் பல இடங்களில் காண்கிறோம்.

கும்பாபிஷேகம் செய்வதிலும், பிராமண போஜனம்செய்வதிலும் பணச்செலவாகிக்கொண்டுதானிருக்கிறது. அதற்கிடையில்தான் ஹிந்து மக்கள் அந்நிய மதத்தினரிடம் அடைக்கலம்புகுந்து வருகின்றனர். இந்தியா முழுதுமிருந்த ஹிந்துக்களில் கிட்டத்தட்ட பாதிப்பேர் ஹிந்து மதத்தில் வெறுப்புக்கொள்ளும்படி—அல்லது அசிரத்தையடையும்படி நிலைமை வளர்ந்துவந்திருக்கிறது.

—— ——

## முக்கிய அறிவிப்பு.

திருச்சி, பொன்மலை வட்டாரங்களில் உள்ள "திராவிடநாடு" வாசகர்களிற் பாக்கி செலுத்தாதவர்கள், அன்புகூர்ந்து உடனே பாக்கி முழுவதையும் செலுத்திவிடும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். இயக்கப்பற்றும் பொறுப்பும் கடமையும் உணர்ந்த தோழர்கள் எனக்குத்தொல்லையையும் பணநஷ்டத்தையும் உண்டாக்காமல், உடனுக்குடன் பணத்தைச்செலுத்திவிடுமாறு பெரிதும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இங்ஙனம், S. பரமசிவம்
"திராவிடநாடு" எஜண்ட்
சீரங்கம்.

Edited Printed and Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 51-Chairman, Sambasiva Chettiar Street, L. Conjeeveram.